DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 5/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Defence | : | D.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கருப்புசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.11.2025.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

8. உடுமலை காவல் நிலையத்தில் நான் புகார் 769/2018 05.10.2018 ம் தேதியிட்ட சிஎஸ்ஆர் மனு ரசீதின் அசல் **எமசா.ஆ.1** என குறியீடு செய்யப்படுகிறது.

பொன்ராஜ் என்பவர் பெயரில் டாக்டர் சசிக்குமார் என்பவர் என்னிடம் பெற்ற மற்றொரு காசோலையை வசூலுக்கு தாக்கல செய்து அதற்கு கடந்த 01.03.2020 ம் தேதியன்று அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு **எமசா.ஆ.2** என குறியீடு செய்யப்படுகிறது.

9. 17.08.2017 ம் ஆண்டு பிந்துமோல் என்பவர் மீது ரூபாய் 25 லட்சத்திற்கு காசோலை கொடுத்து வசூலுக்கு பின்னிட்டு நீதிமன்றத்தில் டாக்டர் சசிக்குமார் தாக்கல் செய்த புகார் நகல் **எமசா.ஆ.3** என குறியீடு செய்யப்படுகிறது.

10. நந்தி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் பிரதாப் என்பவர் மீது டாக்டர் சசிக்குமார் ரூபாய் 1 கோடியே 72 லட்சத்து 91 ஆயிரத்து 520

காசோலை கொடுத்து வசூலுக்கு பின்னிட்டு நீதிமன்றத்தில் டாக்டர் சசிக்குமார் தாக்கல் செய்த புகார் நகல் **எமசா.ஆ 4** என குறியீடு செய்யப்படுகிறது.

11. ரவிசந்திரன் மீது ரூபாய் 30 லட்சத்துக்கு நீதிமன்றத்தில் டாக்டர் சசிக்குமார் தாக்கல் செய்த பிராது நகல் **எமசா.ஆ. 5** என குறியீடு செய்யப்படுகிறது.

12. இதை தவிர வின்செனட் மீது ரூபாய் 51 லட்சத்துக்கு காசோலை வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. பொய்யான கந்து வட்டி வழக்கு. மேற்படி நான்கு பேர் மீது அவர் பொய்யாக வழக்கு போட்டுள்ளார். இதிலிருந்து விடுதலை வேண்டும்

<u>**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. புகார்வாதி டாக்டரை எத்தனை வருடமாக தெரியும் என்றால் 2015 லிருந்து தெரியும். இது இல்லாமல் வேறு வரவு செலவு உங்களுடன் இருந்ததா என்றால் இல்லை. அவரும் டாக்டர், உங்களது மனைவியும் டாக்டர் என்றால் சரிதான். இருவரும் ஐஸ்வர்யா நகரில் மருத்துவமனை வைத்து நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். இந்த மருத்துவமனைக்கு எதிராக வின்செனட் என்பவர் ஒரு கார் டீலிங் பழைய கார்கள் வாங்கி விற்கும் அலுவலகம் நடத்தி வந்தார் என்றால் சரிதான். அந்த வின்செனட் உங்களுக்கு நண்பர் என்றால் சரிதான். நீங்களும் கார் டீலிங் பிசினஸ் செய்து வந்தீர்கள் என்றால் சரிதான். நீங்கள் வின்செனட் கார் டீலிங் அலுவலத்தில் அமர்ந்து கார் டீலிங் பிசினஸ் செய்து வந்தீர்கள் என்றால் இல்லை.
2. ரவிச்சந்திரன் கார் டீலிங் ஆபிஸ் தள்ளி பிரிமியர் எலக்ட்டிரிக் கடை வைத்திருந்தார் என்றால் ஆமாம். அவரும் உங்கள் நண்பர் என்றால் இல்லை. பிரசாந்த் மற்றும் அவரது மனைவி பிந்து மோல் அவர்கள் உங்களுக்கு தெரிந்தவர்களாக என்றால் பெரியதாக பழக்கமில்லை. நீங்கள், ரவிச்சந்திரன், பிரசாந்த், பிந்துமோல், ஆகியோர்கள் மீது மருத்துவர் வழக்கு பதிவு செய்த நகல்களை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ஆமாம்.
3. எந்த தேதியில் கடன் புகார் தாரரிடம் வாங்கினீர்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை, 2015 செப்டம்பர் மாதம். அதற்கு வட்டி செலுத்தி வந்தீர்களா என்றால் ஆமாம் எவ்வளவு கொடுத்தீர்கள் என்றால் முதலில் ஐந்து சதவீதம், இரண்டாவது 10 சதவீதம் போட்டு கணக்கு முடிக்க சொன்னார். நீங்கள் இவ்வாறு கூறியதற்கு எழுத்து மூலம்

ஆதரவு உள்ளதா என்றால் இல்லை.

4. மூன்று வருடம் கழித்து 2018 புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் ஆமாம். புகார் கொடுத்ததன் பெயரில் மருத்துவரை அழைத்து விசாரித்தார்களா என்றால் மருத்துவர வர சொன்னார்கள், காலதாமதப்படுத்தி நான் சி எஸ் ஆர் பெற்ற பிறகு 15 லட்சத்திற்கு என் மீது புகார் கொடுத்து விட்டார். போலீசார் மருத்துவரை விசாரித்தார்கள் இரண்டாவது முறை வர சொன்னதற்கு அவர் வரவில்லை. போலிசார் அவரை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் அவர் மருத்துவர் என்பதாலும் செல்வாக்கு உள்ளதாலும் என்பதால் விசாரிக்கவில்லை, கோர்ட்டில் பார்த்துக் கொள்ள சொல்லி விட்டார்கள். நீங்கள் அதன் பெயரை எஸ்.பி. இடம், டிஐஜி இடம், புகார் கொடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஆமாம். நீங்கள் சி எஸ் ஆர் பெற்றதை அதனை வைத்து நீதிமன்றத்தில் தனிப்புகாரும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நீங்கள் 15 லட்சம் வாங்கியதால் தான் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இல்லை.
5. பொன்ராஜ் நோட்டீஸ் அனுப்பியதாக சொல்லியுள்ள நிலையில் அவர் டாக்டரின் நண்பர் என சொல்லியுள்ள நிலையில் பொன்ராஜ்க்கு டாக்டரும் நண்பர் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை, டாக்டரிடம் நான் கொடுத்த செக்கை பொன்ராஜ் போட்டுள்ளார் .
6. தனிப்பட்ட மூன்றாம் நபரிடம் பெற்ற கடன்களுக்கு மருத்துவர் பொறுப்பாக மாட்டார் என்றாலும் பொன்ராஜுக்கும் டாக்டருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும், பொன் ராஜ்ஜிற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், டாக்டரின் நண்பர் பொன்ராஜ் இல்லை என்றாலும் மற்றவர்களிடம் வாங்கும் கடனை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக இவ்வாறு கூறி வருகிறீர்கள் என்றால் சரியல்ல. ரவிச்சந்திரன், வின்சென்ட், பிரதாப், பிந்து மோல் ஆகியவர் மீது டாக்டர் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் இருந்து வருகின்றது என்றால் சரிதான். அதை அவர்கள் வழக்கறிஞர் வைத்து நடத்தி வருகிறார்கள் என்றால் ஆமாம்.
7. GRK கார்ஸ்ஸில வைத்து புகார் வாதி உங்களிடம் பணம் கேட்டு மிரட்டியதாக சொல்லி உள்ள நிலையில் அப்பொழுது உங்களுடன் யார் இருந்தார்கள் என்றால் வின்சென்ட் இருந்தார், அங்கு வெளியூர் நண்பர்கள் GRK கார்ஸ்ஸில் இருந்தார்கள்.
8. ரவிச்சந்திரன், வின்சென்ட், பிரதாப், பிந்து மோல் ஆகியோரை விசாரிக்க உங்கள் தரப்பில் மனு போட்டிருந்தீர்கள் என்றால் ஆமாம்.

அந்த மனு இந்த நீதிமன்றத்தால் பகுதியாக நிராகரிக்கப்பட்டது என்பதை தெரிந்து கொண்டீர்களா என்றால் ஆமாம். மருத்துவருக்கு கொடுத்த காசோலை நீங்கள் கையெழுத்து செய்த உங்களுடைய காசோலை என்றாலும் அந்த கையெழுத்து உங்களுடையது என்றாலும் வெற்று காசோலையை தான் கொடுத்தேன் என்று ஞாபகம் உள்ளது, கையெழுத்து போட்டதாக சரியாக ஞாபகம் இல்லை. உங்கள் வழக்கறிஞர் வைத்து பதில் அறிவிப்பில் உள்ள சங்கதி தெரியுமா என்றாலும் அதில் கையெழுத்து போட்டதாக சொல்லி அனுப்பியுள்ளிர்கள் என்றாலும் கையெழுத்து போட்டேனா என்று தற்போது சரியாக ஞாபகம் இல்லை, மருத்துவரே உங்களது கையெழுத்தை போட்டு விட்டதாக கூறிகிறிர்கள் என்றால் தெரியவில்லை. உங்கள் வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் காசோலையில் கையெழுத்து போட்டு விட்டதாக சொல்லிவிட்டு தற்போது ஞாபகம் இல்லை என்று வழக்கிற்காக முன்னுக்கு பின் முரணாக சொல்கிறிர்கள் என்றால் அப்படி இல்லை தற்போது சரியாக ஞாபகம் இல்லை. கையெழுத்தை நிபுணர் மூலம் நடவடிக்கை எடுக்க அனுப்ப உள்ளிர்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

9. நீங்கள் புகார் கொடுத்த மாதிரி மற்ற வின்செண்ட், ரவிச்சந்திரன், பிரதாப், பிந்துமோல் ஆகிய நபர்கள் மருத்துவர் மீது போலீசில் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். ஆனால் அந்த மனுக்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. ஐந்து பெயர்களும் நண்பர்கள் என்றாலும் எல்லாரும் மருத்துவர்களிடம் கடன் வாங்கி உள்ளீர்கள் என்றாலும் உரிய தொகைகளுக்கு தான் போலிசாரிடம புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் அனைவருமே மருத்துவரை ஏமாற்ற வேண்டும் என திட்டம் போட்டுள்ளீர்கள் என்றாலும் அதன் தேவை தான் புகார் நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என்றாலும் அதனால் தான் மாற்றி சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் மருத்துவர் தான் எங்களை ஏமாற்றினார். அவருக்கு அவ்வளவு தொகைகள் கொடுக்கும் அளவிற்கு சோர்ஸ் இல்லை. அவ்வளவு பணம் வாங்கும் அளவிற்கு எனக்கு சோர்ஸ் இல்லை.

10. நீங்கள் காசோலை கொடுத்து ஏமாற்றியதால் நீதிமன்ற மூலம் தண்டிக்கப்பட வேண்டியவர் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை